(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

முற்பகல் 10–05

(ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், மௌலிவாக்கத்தில் தனியார் கட்டடம் இடிந்து விழுந்ததில் ஏற்பட்ட உயிரிழப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், மௌலிவாக்கம் கிராமத்தில் கட்டப்பட்டு வந்த 11 மாடிக் கட்டடம் இடிந்து விழுந்த விபத்தில் ஏற்பட்ட மனித உயிரிழப்புகள் குறித்த இரங்கல் தீர்மானத்தைப் பேரவைமுன் வைக்கிறேன்.

"காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், மௌலிவாக்கம் கிராமத்தில் தனியாரால் கட்டப்பட்டு வந்த 11 மாடிக் கட்டடம் 28–6–2014 அன்று மாலை இடிந்து விழுந்த விபத்தில், கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் 61 பேர் உயிரிழந்தது குறித்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

இக்கொடிய விபத்து குறித்து செய்தி அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் விபத்து நடந்த இடத்தை நேரில் சென்று பார்வையிட்டு, அங்கு நடைபெற்றுவரும் மீட்புப் பணிகள் குறித்து ஆய்வு செய்து தேவையான அறிவுரைகளை வழங்கி, மீட்புப் பணிகளை துரிதப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்கள்.

இவ்விபத்தில் மரணமடைந்த அனைத்து குடும்பங்களுக்கும் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா இரண்டு இலட்சம் ரூபாய் வழங்கவும், தமிழ்நாட்டைச் சேர்ந்த தொழிலாளர்களின் குடும்பங்களுக்குக் கூடுதலாக ஐந்து இலட்சம் ரூபாய் வழங்கவும் உத்தரவிட்டார்கள். இந்தத் துயர சம்பவத்தில் படுகாயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருபவர்களையும், அவர்தம் குடும்பத்தினரையும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் நேரில் சந்தித்து ஆறுதல் கூறி, 50,000 ரூபாய் நிதி உதவி வழங்கியதோடு, அவர்கள் விரைவில் பூரண குணமடைய தேவையான உயர் சிகிச்சை அளிக்கவும்,

அதற்கான முழுத் தொகையையும் அரசே ஏற்கும் என்றும் அறிவித்தார்கள்.

இந்தத் துயரச் சம்பவம் நடைபெற்றதற்கான காரணம் குறித்தும், இனிமேல் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருப்பதற்கான வழிமுறைகள் குறித்தும் ஆராய ஓய்வுபெற்ற நீதியரசர் திரு. ஆர். ரெகுபதி அவர்கள் தலைமையில் ஒரு நபர் விசாரணை ஆணையத்தினை 3–7–2014 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அமைத்து உத்தரவிட்டார்கள்.

இக்கோர விபத்து குறித்து புலன்விசாரணை மேற்கொள்ள சென்னை மாநகர காவல் ஆணையரின் ஒட்டுமொத்த மேற்பார்வையில் காவல் இணை ஆணையர் தலைமையில் ஒரு சிறப்புப் புலனாய்வுக் குழுவை அமைத்தும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இக்கொடிய சம்பவத்தில் தங்களது இன்னுயிரை இழந்த தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும், படுகாயமுற்று தவிப்போருக்கு ஆறுதலையும், காயமுற்றவர்கள் விரைவில் குணமடைய வேண்டும் என்ற விழைவையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது".

(இ) திருவள்ளூர் மாவட்டம், அலமாதி கிராமத்தில் சேமிப்புக் கிடங்கின் மதில் சுவர் இடிந்து விழுந்ததில் ஏற்பட்ட உயிரிழப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவள்ளூர் மாவட்டம், அலமாதி கிராமத்தில் சேமிப்புக் கிடங்கின் மதில் சுவர் இடிந்து விழுந்த விபத்தில் ஏற்பட்ட மனித உயிர்கள் இழப்பு குறித்த இரங்கல் தீர்மானத்தை இப்பேரவைமுன் வைக்கிறேன்.

"திருவள்ளூர் மாவட்டம், அலமாதி கிராமத்தில் உள்ள சேமிப்புக் கிடங்கின் மதில் சுவர் 6–7–2014 அன்று இடிந்து விழுந்த விபத்தில் கட்டடத் தொழிலாளர்கள் 11 பேர் உயிரிழந்தது குறித்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

இவ்விபத்தில் மரணமடைந்தவர்களின் குடும்பத்திற்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் வழங்கவும், இறந்தவர்களின் உடல்களை அவரவர் சொந்த ஊருக்கு அரசு செலவில் கொண்டு செல்லவும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.